# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண். 161/மா/2018
ஆணை நாள்: 19–02–2020

17/07/2018 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி

– தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 12,
சென்னை மாநகராட்சி.

– எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சியின் 12-வது மண்டலத்தில் (ஆலந்தூர் மண்டலம்) உள்ள கட்டிடங்களுக்கு அளவு குறைத்து சொத்துவரி நிர்ணயித்ததால் ஆலந்தூர் மண்டலத்தில் உச்சபட்ச குளறுபடிகள் உள்ளது என 17/07/2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியாகி இருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை, இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முறையீட்டு மனுவாக ஏற்று, 161/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்தது. இது சம்பந்தமாக பெருநகர சென்னை மாநகராட்சியின் 12வது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை:

பெருநகர சென்னை மாநகராட்சியின் 12-வது மண்டலமான ஆலந்தூர் மண்டலத்தில் உள்ள 157வது வார்டில் வீட்டிற்கு ஒரு சதுர அடிக்கு 30 பைசாவும், வணிக நிறுவனங்களுக்கு 85 பைசா வீதம்

வரி வசூலிக்கப்படுகிறது என்றும் ஆனால், வார்டு எண்.160 முதல் 167 வரையில் உள்ள 8 வார்டுகளில் வீட்டிற்கு 6 ரூபாய் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 18 ரூபாய் என வரி வசூலிக்கப்படுகிறது என்றும் இதன் காரணமாக ஒரு பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்படுவதாகவும், சொத்து வரி நிர்ணயித்ததில் ஆலந்தூர் மண்டலத்தில் உச்சபட்ச குளறுபடிகள் உள்ளது என 17/07/2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியாகி உள்ளது. இச்செய்தி தொடர்பான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் அறிக்கையாக சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 19.07.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி 12வது மண்டல அலுவலர் 7.7.2019 நாளிட்ட ந.க.எண்.வ.து.ஆர்.1./2841/2019ல் கீழ்க்கண்டவாறு விளக்க அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

“(1) அரசாணை எண்.97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 19.07.2011ன் படி ஆலந்தூர் நகராட்சி, நந்தம்பாக்கம் மற்றும் மீனம்பாக்கம் பேரூராட்சிகள் மற்றும் முகலிவாக்கம், மணப்பாக்கம் ஊராட்சிகளை கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி, 12-வது மண்டலமாக உருவாக்கப்பட்டது.

(2) ஆலந்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி அரசாணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 12.11.2007, அரசு கடித எண்.38279/தேர்தல்/2006, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.02.2008 மற்றும் அரசாணை (நிலை) எண்.110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 23.06.2008 ஆகிய ஆணைகளின் அடிப்படையில் சொத்துவரிக்கான பொது சீராய்வு ஆலந்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 01.04.2008 முதல் மேற்கொள்ளப்பட்டது.

(3) 2008-ல் ஆலந்தூர் நகராட்சியாக செயல்படும் போது ஆலந்தூர், ஆதம்பாக்கம், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தலக்கனாஞ்சேரி ஆகிய பகுதிகளைக் கொண்டு 42 வார்டுகளாக இயங்கிவந்தது. ஆலந்தூர் நகரமன்ற தீர்மான எண்.179, நாள் 31.07.2008-ல் சொத்துவரிக்கான பொது சீராய்வு, அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் சொத்தின் உரிமையாளர்களிடமிருந்து சுயமதிப்பீட்டு படிவம் வரபெற்று சொத்தின் அமைவிடம் மற்றும் உபயோகத்திற்கேற்ப நான்கு வகுப்புகளாக அடிப்படைக் கட்டணம் நிர்ணயித்து சொத்துவரி கணக்கீட்டு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

ஆலந்தூர் நகராட்சியால் 01.04.2008 முதல் சொத்துவரி சீராய்வு செய்ய அந்தந்த நகராட்சிகளின் வரவு-செலவுகள் கருத்தில் கொண்டு வரி உயர்வு உச்சவரம்பு அந்தந்த நகர்மன்றமே தீர்மானித்துக் கொள்ளலாம் என அரசாணை எண்.110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:23.06.2008 வரப்பெற்றுள்ளதால் நகர்மன்றம் ஏற்கனவே தனது தீர்மான எண்.607, நாள்:28.02.2008 வரி உயர்வு உச்சவரம்பினை நிர்ணயம் செய்வதைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்து வரி உயர்வு உச்சவரம்பு நிர்ணயம் செய்து மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

(அ) குடியிருப்பு கட்டிடங்கள் (சொத்து குடியிருப்பு + வாடகை)

| | | |
|---|---|---|
| I. | **31.03.2003**-க்கு முன்பு சொத்துவரி விதிக்கப்பட்ட குடியிருப்பு கட்டிடங்களுக்கு | **12%** மிகாமல் |
| II. | **01.04.2003** முதல் **31.03.2004** வரை சொத்துவரி விதிக்கப்பட்ட குடியிருப்பு கட்டிடங்களுக்கு | **10%** மிகாமல் |
| III. | **01.04.2004** முதல் **31.03.2005** வரை சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு | **5%** மிகாமல் |
| IV. | **01.04.2005**-க்கு பின்னர் சொத்துவரி விதிக்கப்பட்ட குடியிருப்பு கட்டிடங்களுக்கு வரி உயர்வு இல்லை. | ---- |

( ஆ) தொழிற்சாலை கட்டிடங்கள் (மற்றும்) வணிககட்டிடங்கள்

| | | தொழிற் சாலை | வணிக கட்டிடங்கள் |
|---|---|---|---|
| I. | 31.03.2003-க்கு முன்னர் சொத்துவரி விதிக்கப்பட்ட தொழிற்சாலை/வணிக கட்டிடங்களுக்கு | **50%** மிகாமல் | **75%** மிகாமல் |
| II. | **01.04.2003** முதல் **31.03.2004** வரை சொத்துவரி விதிக்கப்பட்ட தொழிற்சாலை/வணிக குடியிருப்பு கட்டிடங்களுக்கு | **20%** மிகாமல் | **20%** மிகாமல் |
| III. | **01.04.2004** முதல் **31.03.2005** வரை சொத்துவரி விதிக்கப்பட்ட தொழிற்சாலை/வணிக கட்டிடங்களுக்கு | **15%** மிகாமல் | **15%** மிகாமல் |
| IV. | **01.04.2005** முதல் **31.03.2006** வரை சொத்துவரி விதிக்கப்பட்ட தொழிற்சாலை/ வணிக கட்டிடங்களுக்கு | **10%** மிகாமல் | **10%** மிகாமல் |
| V. | **01.04.2006** முதல் **30.09.2007** வரை சொத்துவரி விதிக்கப்பட்ட தொழிற்சாலை/ வணிக கட்டிடங்களுக்கு | **5%** மிகாமல் | **5%** மிகாமல் |
| VI. | **01.10.2007**-க்கு பின்னர் சொத்துவரி விதிக்கப்பட்ட தொழிற்சாலை/ வணிக கட்டிடங்களுக்கு | வரி உயர்வு இல்லை. | |

(4) அரசாணை மற்றும் நகரமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் 01.04.2008 முதல் ஆலந்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்தின் உரிமையாளரிடமிருந்து சுயமதிப்பீட்டு படிவம் வரப்பெற்று சொத்துவரிக்கான பொதுச் சீராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, ஆலந்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி குறைவாக நிர்ணயித்ததில் குளறுபடி ஏற்பட்டதாக வெளிவந்த தினமலர் நாளிதழின் செய்தி தவறாகும்.

(5) சென்னை மாநகராட்சி சட்டம், 1919, விதி 414-A (3) All taxes, fees and duties, except in respect of water supply and sewerage services, which immediately before the date of such Notification, were being levied by such municipal council, panchayat union council or village panchayat, as the case may be, shall be deemed to have been levied by the corporation under the provisions of this Act and shall continue to be in force accordingly until such taxes, fees and duties are revised, cancelled or superseded by, anything done or any action taken under this Act.

(6) மேலே இனம்-5ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதியில் முந்தைய உள்ளாட்சி அமைப்பினால் வசூலிக்கப்பட்டு வந்த வரியினை எவ்வித மாற்றமின்றி வசூலிக்க விலக்குவாசகம் அளிக்கப்பட்டுள்ளதால் (Saving Clause) அவ்வாறே சொத்துவரி சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டு வந்தது.

(7) நீதிப்பேராணை எண்.2730/2018, நாள்:17.07.2018 அன்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுரைகளின் அடிப்படையில் அரசு, அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள்:19.07.2018, அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள்:26.07.2018-ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுச் சீராய்வு மேற்கொள்ளப்பட்டு விரிவாக்கத்திற்குட்பட்ட ஆலந்தூர் பகுதிக்குண்டான கட்டிடங்களுக்கு சொத்துவரி சீரமைக்கப்பட்டுள்ளது என்ற அறிக்கையினை சமர்ப்பிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்."

தினமலர் செய்தி மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை நன்கு பரிசீலிக்கப்பட்டு மண்டல அலுவலரின் அறிக்கை ஏற்கப்பட்டது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற அறிவுரைகளின் அடிப்படையில் 19.7.2018 மற்றும் 26.7.2018 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்கள்.73 மற்றும் 76ல் வழங்கப்பட்டுள்ள அரசாணைகளின்படி ஆலந்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட குடியிருப்பு மற்றும் வணிக வளாக கட்டிடங்களுக்கு எந்தவிதமான விடுபாடுகளும் இல்லாமல் விருப்பு வெறுப்பு இன்றி சொத்துவரி நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதனையும் ஒரே அளவுள்ள கட்டிடங்களுக்கு வித்தியாசம் இல்லாமல் சொத்துவரி நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதனையும் உறுதி செய்துகொள்ள அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலர்.

பெறுநர்
மண்டல அலுவலர்,
மண்டலம் – 12,
பெருநகர சென்னை மாநகராட்சி,
கதவு எண்.1, புதுத்தெரு,
ஆலந்தூர், சென்னை – 600016.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
செயலரின் நேர்முக எழுத்தர்
ஊராட்சி பிரிவு அலுவலர்
இ. கோ. / உதிரி